<u>பத்திரிக்கை குறிப்பு</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தர்மபுரி பிரிவு அலுவலகத்தை அணுகி, தன்னுடைய தந்தை வன சரகம், தர்மபுரியில் பணிபுரிந்து 1990ம் ஆண்டு ஓய்வு பெற்றும், கடந்த 2007ம் ஆண்டு இறந்ததால் தன்னுடைய தாய் குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்ததாகவும், தன்னுடைய தாய் 2019ம் ஆண்டு இறந்தபின் தான் விதனவ என்ற காரணத்தினால் அந்த ஓய்வூதியம் பெற்று வந்ததாகவும் கடந்த 2007மள் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை ஓய்வூதியம் நிலுவை தொகை ரூ.4 லட்சம் வழங்கபடாமல் இருந்ததாகவும், அத்தொகையினை பெற்று தர மனு செய்ததாகவும், அத்தொகையினை பெற்று தர தர்மபுரி வனசரக அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.பழனிசாமி என்பவர், தனக்கு ரூ.34,410/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 01.12.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது தர்மபுரி வனசரக அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.பழனிசாமி புகார்தாரரிடமிருந்து ரூ.34,410/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Dharmapuri detachment, and gave complaint that she is a widow and her father who worked at the Forest Office, Dharmapuri and retired in the year 1990 and he expired in the year 2007. From 2007 to 2010 the family pension was not received and from 2010 her mother was ordered family pension and received the pension. Meanwhile her mother also expired in the year 2019 and since the complainant is a widow, she is now receiving the family pension. For obtaining the pension of Rs.4 lakhs, pending for the period 2007 to 2010, the complainant had applied to Forest department. To process the petition Tr.Palanisamy, Assistant, Office of the Social Forestry and Extension, Dharmapuri district, demanded Rs.34,410/- as bribe. In this connection a case was registered and a trap was organized today 01.12.2021.

During trap proceedings, the accused Tr.Palanisamy, Assistant, Office of the Social Forestry and Extension, Dharmapuri district, reiterated their earlier demand and received the bribe amount of Rs.34,410/- from the complainant. The accused was arrested.